# நான் கண்டதிலேயே மிகப் பயங்கரமான காட்சி இதுதான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 8

செய்தி: **கேள்விகளும் பதில்களும் COD #15, மே 27, 1962**

111. ஆனால் அது என்ன? அது ஒரு கழுகு போல. ஒரு சமயம் நான் கண்ட... இங்கே சின்சின்னாட்டி மிருகக் காட்சி சாலையில், நான் சாராளை அழைத்து அதில் சென்று கொண்டிருந்தேன். **நான் ஒரு காட்சியைக் கண்டு அது என்னை பாதிப்படையச் செய்யுமானால், அது மிருகங்கள் கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருப்பதே ஆகும்.**

112. **ஒரு கூண்டுக்குள் எந்த ஒன்றும் அடைக்கப்பட்டிருப்பதை நான் காணும் போது என்னால் அதை பொறுத்துக் கொள்ளவே முடியாது - சிறு பறவைகள் அடைக்கப்பட்டிருந்தாலும் கூட.** பெண்களாகிய நீங்கள் அதைப் போன்ற சிறு பறவைகளை வைத்திருக்கிறீர்கள் என்பதை நானறிவேன், **நீங்கள் அவைகளை வெளியே விட்டு விடுங்கள்.**

113. நான் ஒரு சிறு பையனாக இருக்கையில், "எனக்கு ஒரு தருணம் கிடைக்குமானால், நான் ஒரு மனிதனாக ஆகும்போது, நான் ஒவ்வொரு வீட்டிற்குள் மெதுவாக நுழைந்து அந்த சிறு உயிரினங்களை வெளியே எடுத்து விட்டு விடுவேன்" என்று கூறுவதுண்டு. ஆம், ஐயா. நான் கூறினேன். அங்கே சூரிய உஷ்ணத்தில் அவை இருக்கின்றன, இவர்கள் அதைப் பார்த்து "ஹா, ஹா, ஹா" என்று சிரிக்கின்றனர். அங்கே ஒரு பெண் ஒரு முன் தாழ்வாரத்தில் உட்கார்ந்து சிகரெட் புகைத்துக் கொண்டிருப்பாள், பாவம் அந்த சிறு பறவை அங்கே வெப்பத்தில் பொசுக்கப்பட்ட நிலையில் உட்கார்ந்து கொண்டிருக்கும். அந்த பறவையால் ஒன்றுமே செய்யமுடியாது, அது அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கத்தான் முடியும். அது அதற்காக பிறக்கவில்லை! நான் "உம், நான் மாத்திரம் மெதுவாக நுழைந்து அதை வெளியே திறந்து விட முடியுமானால், அது நீண்ட காலம் அதில் இருக்காது" என்று நினைத்தேன். பாருங்கள்?

114. கூண்டில் அடைக்கப்பட்ட எந்த ஒன்றையும் பார்க்க எனக்கு விருப்பமில்லை. ஒரு மனிதன் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொண்டு பிறகு ஏதோ ஒரு சபைக்

கோட்பாட்டிற்குள் அடைபட்டுக்கிடப்பதை காண்பது எனக்கு வெறுப்பாக இருக்கிறது "என்னால் ஆமென் என்று சொல்ல முடியாது. அதில் எனக்கு விசுவாசம் கொள்ள முடியவில்லை. 'அதை விசுவாசிக்காதே' என்று போதகர் கூறுகிறார்". ஓ, என்ன, அது! நீ சுதந்தரமாய்ப் பிறந்த ஒருவன்.

115. அப்படியானால் ஒரு பெரிய கழுகைக் குறித்தென்ன? அது ஒரு உன்னதப் பறவையாகும். அது மேலே மேகங்களுக்கு மேலே வாழ்கின்ற ஒன்று. ஒரு காலையில் அது அங்கே தான் செல்கின்றது. மிக உயரத்தில் அது பறக்கும். வேறெதுவுமே அதைப் பின் தொடர்ந்து பறக்க முடியாது! எந்த ஒரு பறவையும்... அந்த கழுகைப் பின் தொடர்ந்து பறக்க முயலுமானால் அது சிதறிப் போய்விடும். அது விசேஷமாக உருவாக்கப்பட்ட பறவையாகும்.

116. அந்த கழுகை யாரோ சிலர் மனிதனால் உண்டாக்கப்பட்ட கண்ணியில் சிக்க வைத்து, இந்த பெரிய கழுகைப் பிடித்து இந்த கூண்டிற்குள் அடைத்துப் போட்டனர். பாவம், இந்த பரிதாபத் திற்குரியது. நான் அதை நோக்கிப் பார்த்தேன், என் இருதயம் அப்படியே எரிந்தது. அது வேறு பக்கமாக திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்த கூண்டிலிருந்து எப்படி வெளியே செல்ல வேண்டுமென்று அதற்குத் தெரியாதிருந்தது. அது அப்படியே அங்கே... எப்படி மேலே எழும்ப முடியும் என்பதுதான் அதற்கு தெரியும். அது தன் இறக்கைகளை அடிக்கும். மேலே எழும்பும், நேராக இரும்பு கம்பிகளில் தன் தலையை மோதும். அதன் இறக்கைகளிலிருந்து சிறகுகள் விழும், இறக்கைகளை விரித்து அசைக்கும், அது தன் தலையில் இரத்தம் வடியும் அளவிற்கு அவ்விதமாக செய்து கொண்டிருக்கும். அது மேலே உள்ள இரும்புக் கம்பியில் வேகமாக மோதி அப்படியே வேகமாக கீழே விழும். அது அப்படியே இருந்து அதன் சோர்ந்து போயிருக்கின்ற கண்களை உருட்டி வானத்தை நோக்கிப்பார்த்துக் கொண்டிருக்கும், “நான் அதோ அந்த இடத்தைச் சேர்ந்தவன். அதோ என் வீடு. அந்த இடத்திற்காகத்தான் நான் பிறந்திருக்கிறேன். ஆனால், பார், எனக்கும் அதற்கும் நடுவில் ஒரு கூண்டு இருக்கிறது. ஆம், எனக்குத் தெரிந்த ஒன்றேயொன்று என் சிந்தையை அதற்கு நேராக வைப்பதேயாகும், இதோ நான் வருகிறேன்.” அப்பொழுது அது எழும்பும். “படார்” என்று மோதும் சத்தம் கேட்கும், திரும்பவும் அது கீழே விழுந்து விடும்.

117. “ஓ, என்னே, அது பயங்கரமாயிருக்கிறதே!” என்று நான் நினைத்தேன். “அவர்கள் அதை எனக்கு விற்றால் நலமாயிருக்கும். நான் என் ஃபோர்ட் காரை அடகு வைத்து அதை வாங்கி அதை சுதந்தரமாக விட்டு விடுவேன்” என்று நினைத்தேன். பாருங்கள்? ஓ, அந்த காட்சி என்னை வேதனையுறும்படிக்குச் செய்தது. அந்த பரிதாபத்திற்குரிய பெரிய பறவை, அது சிறகுகளை அடித்துக் கொண்டிருந்தது.... “நான் கண்டதிலேயே மிகப் பயங்கரமான காட்சி இதுதான்” என்று நான் நினைத்தேன்.

118. இல்லை, நான் அதைத் திரும்ப பெற்றுக்கொள்கிறேன், நான் கண்டதிலேயே மிகப்பயங்கரமான காட்சியானது தேவனுடைய குமாரனாக இருக்க ஒரு மனிதன் பிறக்கிறான். ஆனால் பிறகோ அவன் ஏதோ ஒரு கோட்பாடு என்னும் கூண்டுக்குள் அடைபட்டுப் போகிறான். அங்கேயிருந்து அவன் மேலே நோக்கிப் பார்த்து தான் உண்மையாகவே ஊழியம் செய்ய விரும்புகிற ஒரு தேவனைக் காண்கிறான். ஆனால் அவனால் அதைச் செய்ய முடியவில்லை. அவ்விதமாகச் செய்ய அவனை அவர்கள் விடமாட்டார்கள். பாருங்கள், அவன் கூண்டில்

அடைக்கப்பட்டிருக்கிறான். அது ஒரு மோசமான காரியமாகும்.

119. ஆம், ஆம், சகோதரியே, சகோதரனே, இதை எழுதின யாராயிருந்தாலும் சரி, நீங்கள் இங்கே விழுந்து போயிருப்பீர்களானால், அதனாலே நீங்கள் இழந்து போகப்பட்டீர்கள் என்று அர்த்தமல்ல. நீங்கள், ஒரு கூண்டிற்குள் சென்றிருக்கின்ற ஒரு கழுகுதான், அவ்வளவே. நீங்கள் இங்கே மறுபடியுமாக பாவத்தில் மேலும் கீழுமாக அடைக்கப்பட்டிருக்கிறீர்கள். அதிலே இருக்க உங்களுக்கு விருப்பமில்லை, அதன் காரணமாகத்தான் நீங்கள் மேல் நோக்கிப் பார்க்கிறீர்கள். இதோ உங்கள் நிலை "ஓ, சகோதரன் பிரன்ஹாம், ஒரு காலத்தில் நான் அங்கே மேலே ஜீவித்துக் கொண்டிருந்தேன், இங்கிருந்து வருவதற்கு ஒரு வழி இருக்கிறதா?" ஆம்.

120. ஒரு நாளில் நான் (ஓ, ஒரு சிறு பையனாக இருக்கையில்) ஒரு பண்ணைக்கு பின்புறமாக நடந்து சென்றது என் நினைவிற்கு வருகிறது, இங்கே... யாரோ ஒருவர் ஒரு காகத்தை அந்த தானியப் பயிரிடம் செல்ல முடியாதபடிக்கு கட்டி வைத்திருந்தார். அந்த பரிதாபமான காகம் ஏறக்குறைய மரிக்கும் நிலையில் இருந்தது. அந்த விதமாக கேவலமான காரியத்தை செய்யும்

நிலைக்கு நான் மட்டமானவன் அல்ல. அவன் அந்த பரிதாபமான காகத்தின் ஒரு காலைக் கட்டியிருந்தான், அந்த காகத்திற்கு தின்பதற்கென எல்லாமே அதைச் சுற்றிலுமிருந்தன, ஆனால் அந்த காகத்தால் எதையுமே சாப்பிட முடியவில்லை. அந்த விவசாயி அதை அப்படியே விட்டுச் சென்றுவிட்டான். அந்த காகம் எழுந்திருக்கவே முடியாமல் மிகப்பரிதாபமான நிலையில் காணப்பட்டது. அதனால்... மற்ற காகங்கள் பறந்து வந்து “கா, கா, கா” என்று இந்த காகத்தின் மேலிருந்து கூறினது. வேறுவிதமாகக் கூறினால், “எழும்பி வா, ஜானி காகமே! குளிர் காலம் வருகின்றது, நாம் தென்பாகம் சென்று விடுவோம்” என்பதே. ஆனால் அந்த காகத்தால் எழும்பவே முடியவில்லை, அது கட்டப்பட்டிருந்தது.

121. ஒரு நாளிலே ஒரு குறிப்பிட்ட ஆள் அங்கே வந்து அந்த பரிதாபமான காகத்தைக் கண்டான். ஆகவே அவன் அதனிடம் சென்று அதைப் பிடித்து அதைக் கட்டவிழ்த்து “ஓ, பையனே, நீ விடுதலையாயிருக்கிறாய்’ எழும்பிச் செல்” என்றான். பாருங்கள்? ஆகவே அப்பொழுது, முதலாவதாக என்னவென்று

உங்களுக்கு தெரியுமா, அந்த காகம் சுற்றுமுற்றும் நடந்து கொண்டிருந்தது.

122. அங்கே திரும்பவுமாக அந்த காகங்கள் வந்து "ஜானி காகமே! எழும்பி வா, கா, கா, கா! நாம் தென் பாகம் சென்று விடுவோம், குளிர்காலம் வருகின்றது. இல்லையென்றால் நீ குளிரில் உறைந்து போய் மரித்துவிடுவாய்" என்று கூக்குரலிட்டன.

123. இந்த காகமோ, "என்னால் அப்படிச் செய்யமுடியவில்லை" என்றது. பாருங்கள், கட்டப்பட்ட நிலையில் இருந்தே அதற்கு பழகிவிட்டது, பாருங்கள், அது, தான் இன்னுமாக கட்டப்பட்டுத்தான் இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருந்தது.

124. இந்த கேள்வியை எழுதின சகோதரனே, சகோதரியே, நீங்கள் கட்டப்பட்டிருக்கிறீர்கள் என்று ஒருக்கால் நீங்களும் கூட நினைக்கலாம். பிசாசு உங்களை அங்கே கட்டிப்போட்டிருக்கிறான் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் அவன் பொய் சொல்கிறான். ஒரு காலத்திலே பூமிக்கு ஒரு மனிதன் வந்தார், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து, அவர் உங்களை கட்டவிழ்த்து விட்டார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களல்லவா, நீங்கள் இன்னுமாக அங்கேயே இருக்க வேண்டியதில்லை,

தேவையில்லை, இல்லை, ஐயா, நீங்கள் விடுதலையாகியிருக்கிறீர்கள். அது சரி. உங்கள் பாவங்களை எடுத்துப் போட உங்களுடைய இடத்தில் அவர் மரித்தார். நீங்கள் அவர் பேரில் விசுவாசத்தை வைத்து, உங்கள் இறக்கைகளை அடித்து அந்த மற்றவர்களோடு பறந்து செல்லுங்கள். அந்த பிசாசினுடைய பள்ளத்தில் தங்கிவிடாதீர்கள். கூடாது ஐயா.









